**<u>அசல் வழக்கு எண். 63/2022</u>**

30.06.2025

**பெயர் – மாசிலாமணி (PW1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) கூலி வேலை செய்கிறேன். எங்கு வேலை செய்கிறேன் என்றால் காட்டு வேலை கிடைக்கும் இடத்தில் செய்வேன். சாமராயப்பட்டி, உடுமலைப்பேட்டை மற்றும் அருகில் உள்ள ஊர்களுக்கு செல்வேன். மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்றால் கிடைக்கும் வேலையைப் பொறுத்து மாறுபடும். தினம் ரூ.300/– சம்பளம். என் கணவர் டெம்போ ஓட்டுநராக வேலைக்கு செல்கிறார். பழநியில் ஓட்டி வருகிறார். நான் குடியிருக்கும் வீட்டில் வந்து செல்லம்மாள் பிரச்சனை செய்கிறார் அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. செல்லம்மாள் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் யார் என்றால் நான் தான் வீட்டில் குடியிருக்கிறேன். எனக்கு முன்னால் உரிமையாளர் யார் என்றால் சோமசுந்தரம். சோமசுந்தரம் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. அவர் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் அவர் ஊர்க்காரர் சுமார் 25 வருடங்கள் பழக்கம். சோமசுந்தரம் என்பவருக்கு ஊருக்குள் எத்தனை ஏக்கர் சொத்து உள்ளது என்று தெரியாது.

(2) செல்லம்மாள் குடியிருக்கும் இடத்தைச் சுற்றி சோமசுந்தரத்திற்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் செல்லம்மாள் குடியில்லை நான் தான் குடியிருக்கிறேன் சுற்றி சோமசுந்தரத்திற்கு எவ்வளவு நிலம் என்று தெரியாது. சோமசுந்தரம் எப்படி பழக்கம் என்றால் நாங்கள் வழி வழியாக அவர் பண்ணையத்தில் வேலை செய்து வருகிறோம். தற்போது நான் அங்கு செல்வதில்லை. எத்தனை வருடங்களாக வேலை செய்தேன் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை. நான் 25 வருடங்களாக சோமசுந்தரம் பண்ணையத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேங்காய் போடும் வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் 2000 ம் ஆண்டு முதல் வாடகைக்கு பிடித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் ஆரம்பத்தில் வாடகைக்கு இருந்தேன். வாடகைக்கு இருந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சுமார் 5-6 வருடங்கள் வாடகைக்கு பிடித்திருப்பேனா என்றால் அதற்கு மேல் இருக்கும் எனக்கு சரியாக தெரியாது எனது கணவருக்கு தான் தெரியும். 6 வருடங்களுக்கு மேல் என்றால் சுமார் 7 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். 2007 க்கு பின்னர் எங்கு குடியிருந்தேன் என்றால் பாப்பான்குளத்தில் தான் குடியிருந்தேன். 2007 ம் ஆண்டிற்கு பின்னர் வழக்குச் சொத்தில் குடியிருந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) செல்லம்மாளின் கணவர் பெயர் தெரியாது. செல்லம்மாள் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. எந்த தேதி, மாதம் மற்றும் வருடம் பிரதிவாதி பிரச்சனை செய்தார் என்றால் தெரியாது. செல்லம்மாள் மாற்றுத் திறனாளி என்றால் சரிதான். காலில் குறைபாடு உள்ளது. செல்லம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் தெரியாது. செல்லம்மாளுக்கு இரண்டு குழந்தைகள் என்றும் ஒரு குழந்தை மாற்றுத் திறனாளி என்றால் எத்தனை குழந்தைகள் என்று தெரியாது ஒரு குழந்தை மாற்றுத் திறனாளி. 2008 ம் ஆண்டு நான் வாய் மொழியாக செல்லம்மாளை தாவாச் சொத்தில் வாடகைக்கு குடியமர்த்தி அதற்கு ரொக்கமாக ரூ.60 ஆயிரம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அப்போது என் கணவர் மற்றும் நான் கிரையம் வாங்கிய சோமசுந்தரம் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்தில் செல்லம்மாள் தான் 2008 ம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறார் என்றும் நான் தான் அவருக்கு பணம் தர வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/- Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்